**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 384/2022

பெயர் : லெட்சுமி நாராயணன் (DW1) (Cross )

த/க/பெ. :

தேதி :19.09.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**2 மற்றும் 3 வது வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கோரி வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சொத்து பிரச்சனைக்காக போட்டுள்ளார்கள். முதல் வாதி யார் என்றால் எனது தாயார். என் மீதும் சிவசங்கரன், ராஜபாண்டியன் மீதும் வழக்கு போட்டுள்ளார். எனக்கு ஒதுக்கிய பாகத்தை விற்பனை செய்ததாற்காக வழக்கு போட்டுள்ளார். National Highways 45 தரப்பினராக சேர்த்துள்ளார். சர்வே எண். 485/11, 408, 150/2, 180/1, 440, 431 வீட்டு மனையில் மாடி வீடு வழகது போட்டுள்ளார். 485/11 ல் விஸ்தீரணம் 3 மா, 90 குழி. அது புஞ்சை நிலம், திடல். 440, 180, 431 சர்வே எண்கள் கோயில் சொத்து. 440, 180 சர்வே எண் சொத்துக்கள் நான் வாங்கியது எனக்கு சொந்தமானது என்பதால் விற்பனை செய்துள்ளேன். 440, 180 என் பெயரில் வாங்கப்பட்டது என்பதற்காக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2002 ல் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் ஏற்பட்ட கரவோலை தாக்கல் செய்துள்ளேன். 440, 180 சொத்துக்களுக்கான ஆவணம் தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 2018 ல் தாக்கல் செயய்யப்பட்டது என்றால் சரிதான். பி.சா.வா.ஆ.2, 15.03.2024 ல் பெறப்பட்டுள்ளது என்றால்சரிதான். அதற்கு முந்தைய ஆவணங்கள் உள்ளது. பி.சா.வா.ஆ.2 சர்வே எண்ணுக்குரியது என்றால் 408 க்குரியது. புல எண் 408 யை பொருத்து பி.சா.வா.ஆ.2 யை தவிர வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.வா.ஆ.3, 13.02.2025 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். அதற்கு முந்தைய ஆவணங்கள் உள்ளது அவற்றை வழக்கில் தாக்கல் செய்ய இயலும். பி.சா.வா.ஆ.4 புல எண் 485 ல் பொருத்து ஏற்பட்டது என்றால் சரிதான். 09.04.2021 ல் தான் என் பெயரில் மாறி உள்ளது என்றால் 1996 ல் பட்டா மாறி உள்ளது. கணிணி ஏற்றப்பட்டது 2021 ம் ஆண்டு. அதற்கான பட்டா என்னிடம் உள்ளது வழக்கில் தாக்கல் செய்ய இயலும். பி.சா.வா.ஆ.4,

14.02.2025 ல் வழங்கப்பட்டதுஎன்றால் சரிதான். பி.சா.வா.ஆ.4 ன் படி புல எண். 485 க்கு உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். அதை பொருத்து பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்னிடம் இல்லை. பி.சா.வா.ஆ.5, 150/2, 03.04.2021 ல் தான் என் பெயரில் மாறி உள்ளது என்றால் சரிதான். 1994 ல் லேயே பத்திரம் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். வங்கியில் அடமானத்தில் உள்ளது. பி.சா.வா.ஆ.7, 23.06.2025 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். இதற்கு முந்தைய ரசீதுகளும் என்னிடம் உள்ளது. அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன். அதில் குறிப்பிட்டுள்ள வீரமுத்து எங்கள் ஊரை சேர்ந்தவர். வீர முத்து கோவில் இடத்தை என்னிடம் விற்றதற்கான சாகுபடி உரிமையை விற்றதற்கான ஆவணம் என்னிடம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. செல்லாது என்று சொல்லி விட்டீர்கள். எதிர்வழக்குரையில் புல எண். 180/2, 485 ஆகியவற்றை பொருத்து என் பெயரில் பதிவு செய்ப்பட்ட ஆவணம் உள்ளதாக கட்சி எடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பு சான்றாவணங்களில் மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் இல்லை என்றால் கேட்டால் தாக்கல் செய்யதயாராக உள்ளேன். என் எதிர்வழககுரையில் பி.வா.சா.ஆ. 4 மற்றும் 5 சொத்துக்குண்டான என் பெயரிலான ஆவணங்களை வங்கியில் அடகு வைத்துள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**